**கோவை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் – திரு. எஸ்.பானுமதி, பி.எஸ்ஸி, (விவ.)**

**எண். அ3 / 589/ 2016** **நாள் 19.11.2018**

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி –திருமதி. ஆ. விஜயா, இளநிலை உதவியாளர் (பிஅ), வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் (தரக்கட்டுப்பாடு), உதகமண்டலம் – பணிவரன்முறைப்படுத்தி உத்தரவிடல்.

பார்வை
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி.6/136471/2015 நாள் 06.01.2016.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இதே நாள் 22.01.2016.
3. அரசாணை (நிலை) எண். 80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (க்யூ.1) நாள் 02.03.2016.
4. சென்னை, வேளாண்மை ஆணையர் கடித எண். அநிபி2/28602/2016, நாள் 21.04.2016.

------

**உத்தரவு**

இம்மாவட்டம் காரமடை, வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலர் ஆக பணிபுரிந்த திரு. டிபி. ராம்ஜி அவர்கள் அவர்கள் 22.11.2006 அன்று பணியிடை அமரரானார்.

மேற்கண்ட நிலையில் திருமதி.ஆ.விஜயா, அவர்கள் கருணை அடிப்படைப் பணி நியமனம் பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின்கீழ் இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக பணிநியமனம் செய்து கொள்ள இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 1–ல் காணும் செயல்முறை ஆணையில் பெறப்பட்ட ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து, திருமதி.ஆ.விஜயா அவர்களுக்கு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, இவ்வலுவலக கட்டுப்பாட்டின்கீழ் உதகமண்டலம், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு )அலுவலக இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு 29.01.2016 முற்பகல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு பணியினை வரன்முறை செய்திட பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் வெளியிடப்பட்டதின் அடிப்படையில், பார்வை 4–ல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையரின் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின்படியும், திருமதி.ஆ.விஜயா , இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணியினை வரன்முறைப்படுத்தி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற அரசிற்கு முன்மொழிவு அனுப்பும் பொருட்டு பணிவரன்முறை கருத்துருவினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4–ல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் கடிதப்படியும், திருமதி.ஆ.விஜயா , இளநிலை உதவியாளர் அவர்கள் பணியேற்ற நாளில் வழங்கியுள்ள மருத்துவ உடல் தகுதிசான்றின்படியும் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் 29.01.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, இவர் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண் பருவ காலத்தில் வரையறுக்கப்பட்ட பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து உத்திரவிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்)/-எஸ். பானுமதி,
வேளாண்மை இணை இயக்குநர்,
கோவை .

பெறுநர்

திருமதி.ஆ.விஜயா இளநிலை உதவியாளர்,
வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு )உதகை மூலமாக

நகல்- வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) உதகை
நகல்- வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்- இருப்பு கோப்பிற்கு.
உபரி- 5

/ ஆணைப்படி /

ஆட்சி அலுவலர். 20/11/18

20/11/18